**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 205/2021**

**Prosecution Witnesses : 6**

| | | | |
|---|---|---|---|
| Name | : சங்கர்கணேஷ் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(A2 absent. A1 not produced. Counsel present)

**20.03.2024**

**முதல் விசாரணை**

நான் சோழங்குருணியில் குடியிருந்து வருகிறேன். நான் ஈ.பியில் வயர்மேனாக பணி செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 2 ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் ஒரு அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்துக்கள் என்னுடையது தான். அதை காவல் நிலையத்தில் வைத்து போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க கையொப்பம் செய்தேன். அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. எதிரிகளை தெரியாது.மேற்படி கையெழுத்துக்கள் மட்டும் அ.சா.ஆ.6 முதல் 9 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

கடந்த 05.08.2015 அன்று காலை 8.05 மணிக்கு திருமங்கலம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் பொறுப்பு பெருங்குடி காவல் நிலையம் இந்த வழக்கின் 2 எதிரிகளையும் எனது மற்றும் சாட்சி ராமதாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் கைது செய்து விசாரித்த போது 2 எதிரிகளும் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதன் தொடர்ச்சியாக இந்த வழக்கு சொத்தினை போலிசார் கைப்பற்றி அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து இட்டோம் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**

20.03.2024

CC.205/2021

PW-2. Pandi

**மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் கு,வி.**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என்னுடைய மனைவி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். போலிசார் என்னை ஒரு முறை தான் விசாரித்தார்கள் என்றால் சரிதான். புகார் மறுநாள் தான் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னுடைய மனைவிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.